**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar | : | CC. No.130/2019 |
| Miscellaneous | : | |
| preliminary Register | : | |
| Sessions | : | |
| DEPOSITION OF WITNESS for | Prosecution Defence Court | **அ.சா.1** |
| Name : | | தனலட்சுமி |
| Father's/Husband Name: | | **கொளஞ்சி** |
| Village : | | **ஒகலூர்** |
| Taluk : | | **குன்னம்** |
| Age : | | 58/2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 14.07.2022

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியவில்லை. சுமார் 5 வருடங்களுக்கு முன்பு தேதி ஞாபகமில்லை மதியம் 2.00 மணியளவில் நான் ஒகலூரிலிருந்து வடக்கலூர் செல்லும் பாதையில் சோம்பாயி என்பவரின் கொட்டகை அருகில் நின்று கொண்டிருந்தேன். இரண்டு பேர் டூவீலரில் வந்தார்கள். அகரம் சீகூர் பார்டர் போக வழி கேட்டார்கள். நான் 4 கி.மீ என்று சொல்லி கொண்டு இருக்கும் போதே நான் கழுத்தில் வெள்ளை கலர் துண்டு போட்டு இருந்தேன் பின் பக்கமாக வந்து செயினை கழற்றி விட்டார்கள் நான் கத்தினேன் யாரும் வரவில்லை. இரு சக்கர வாகனத்தில் வந்த நபர்களுக்கு 30, 35 வயது இருக்கும். கொஞ்ச நேரம் கழித்து தகவல் கிடைத்து எனது கணவர் வந்தார். வந்ததும் தேடி பார்த்தோம் எங்களால் முடியவில்லை அதன் பிறகு மங்களமேடு காவல் நிலையம் வந்து புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். மேற்படி புகார் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் செயினை திரும்ப பெற்றுக்கொண்டேன். நான் மேற்படி செயினை அடமானத்தில் வைத்து விட்டதால் என்னால் இன்று நீதிமன்றத்தில் மேற்படி செயினை முன்னிலைப்படுத்த முடியவில்லை. என்னிடம் காட்டப்படும் புகைபடத்தில் உள்ளது தான் மேற்படி செயின் ஆகும். மேற்படி புகைப்படம் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் போலிஸ் விசாரணையிலும் முதல் விசாரணையிலும் சொன்னவற்றை தான் சொன்னேன் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரில் என்ன எழுதியிருக்கிறது

என்று என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. நான் வண்டி ஓட்டி சென்றதாக சொல்வதில் அந்த வண்டியின் பதிவு எண் வகை நிறம் ஆகியவற்றை போலிஸ் விசாரணையிலும் புகாரிலும் சொல்லவில்லை என்றால் நான் சரியாக கவனிக்கவில்லை. வண்டி ஓட்டி வந்தவர்கள் ஹெல்மெட் போட்டு இருந்தார்கள். இரண்டு நபர்களும் ஹெல்மெட் போட்டு இருந்தார்களா என்றால் பின்னால் அமர்ந்து இருந்தவர் ஹெல்மெட் போடவில்லை. நான் புகாரிலும் போலிஸ் விசாரணையிலும் ஒருவர் ஹெல்மெட் அணிந்து இருந்ததாக சொல்லி இருந்தேனா என்றால் சொல்லி இருக்கிறேன். பிய்த்து கொண்டு சென்றதாக நான் சொல்வது தாலியா செயினா என்றால் தாலிக்கொடி, தாலி குண்டு ஆகியவை ஆகும். தாலி எத்தனை பவுன் குண்டு எத்தனை பவுன் செயின் எத்தனை பவுன் என்று போலிஸ் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லி உள்ளேனா என்றால் குறிப்பிட்டு தான் சொல்லி உள்ளேன். போலிசார் ஜெயிலுக்கு என்னை அழைத்து சென்று அடையாளம் காட்ட சொன்னார்களா என்றால் சொன்னார்கள் எனக்கு அடையாளம் தெரியவில்லை. செயின் யார் பிய்த்து கொண்டு சென்றது என்று எனக்கு அடையாளம் தெரியாது என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் தான் அவர்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். என்னை எந்த அதிகாரி விசாரித்தார் எந்த தேதியில் விசாரித்தார் என்பது என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். என்னை காவல் நிலையத்திற்கு வரவழைத்து விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். என்னை விசாரிக்கும் போது போலிசார் நான் சொன்னதை கையால் எழுதி கொண்டார்கள் என்றால் சரிதான். கொளஞ்சி எனது கணவர் என்றால் சரிதான். அவரை விசாரிக்கும் போது போலிசார் கையால் எழுதி கொண்டார்கள் என்றால் சரிதான்.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>preliminary Register<br>Sessions | :<br>:<br>:<br>: | CC. No.130/2019 |
| DEPOSITION OF WITNESS for | Prosecution<br>Defence<br>Court | அ.சா.2 |
| Name : | | கொளஞ்சி |
| Father's/Husband Name: | | பெரியசாமி |
| Village : | | ஒகலூர் |
| Taluk : | | குன்னம் |
| Age : | | 55/2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 14.07.2022

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். எனக்கு தேதி ஞாபகமில்லை. சுமார் 4 வருடங்களுக்கு முன்பு மதியம் 2.00 மணியளவில் நான் ஆட்டை ஓட்டி கொண்டு போய்விட்டேன். அ.சா.1 என் மனைவி மாடு ஓட்டி கொண்டு இருந்தார். அவர் நகை காணாமல் போய் விட்டது என்று கத்தினார். நான் வந்து பார்த்தேன் தேடினோம் ஆட்கள் யாரும் இல்லை. என் மனைவி இருவர் இருசக்கர வாகனத்தில் வந்து பார்டருக்கு வழி கேட்டதாகவும் ஒருவர் ஹெல்மெட் அணிந்து இருந்ததாகவும் வழி சொல்லி கொண்டிருக்கும் போதே செயினை பின்னால் கழற்றி எடுத்துக்கொண்டு வண்டியில் சென்று விட்டதாகவும் சொன்னார். தேடி பார்த்தோம் அங்கே ஆட்கள் யாரும் இல்லை அதனால் வந்து மங்களமேடு காவல் நிலையத்திற்கு வந்து புகார் கொடுத்தோம். 30 நாட்கள் கழித்து நகை கிடைத்து விட்டது என்று மங்களமேடு காவல் நிலையத்தில் இருந்து தகவல் சொன்னார்கள் நீதிமன்றத்தில் இருந்து நகையை திரும்ப பெற்று கொண்டோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் போலிஸ் விசாரணையில் சொன்னதை தான் நீதிமன்ற விசாரணையிலும் சொல்கிறேன் என்றால் சரிதான். சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடந்த தேதி, மாதம், வருடம் என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். என்னை விசாரித்த அதிகாரியின் பெயர் எந்த தேதி மாதம் வருடம் என்னை விசாரித்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிஸ் விசாரணையிலும் புகாரிலும் எனது மனைவி வந்த நபர்களில் ஒருவர் ஹெல்மெட் அணிந்து இருந்ததாக சொன்னார் என்றால் சரிதான். காணாமல் போன பவுனில் தாலி

எத்தனை பவுன், குண்டு எத்தனை பவுன், செயின் எத்தனை பவுன் என என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். வந்தவர்கள் எந்த நிற வண்டியில் வந்தார்கள் என்று என் மனைவி என்னிடம் சொன்னாரா என்றால் இல்லை.